முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை : திருமதி.அ. கயல்விழி,பி.எஸ்.சி.பி.எட்.பி.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**2018**ம் ஆண்டு ஜூன் மாதம் **21**ம் நாள் வியாழக்கிழமை

**I.D.O.P.No. 1/2018**

காந்திமதி (எ) எஸ்தர் ,
த/பெ.குமாரவேல் ... மனுதாரர்

/எதிர்/

ஆரோக்கியசாமி
த/பெ.அமிர்தம் ... எதிர்மனுதாரர்

மேற்படி மனுவானது 18.6.2018 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.பாபு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.தனபால் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை, மற்றும் இரு தரப்பு வழக்கறிஞரின் வாதுரையைக் கேட்டும், இந்நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்விலிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...

உத்தரவு

மனுதாரர் தரப்பில் இந்திய விவாகரத்து சட்டப்பிரிவு 10(1) (x)ன் கீழ் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 03.02.2010ல் சமூக வழக்கம் மற்றும் கிறிஸ்தவ மத சடங்குகளின்படி தொண்டி நரிக்குடியில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து நடந்த திருமணத்தை ரத்து செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** மனுதாரரின் மனுவின் சுருக்கம்:

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 03.02.2010ல் சமூக வழக்கம் மற்றும் கிறிஸ்தவ மத சடங்குகளின்படி தொண்டி நரிக்குடியில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து எதிர்மனுதாரரின் சகோதரியின் கணவரும் பாதிரியாருமான Rev.A. சாலமோன்ராஜா D.Th( மாரநாத சபை

கோதண்புரம் சீர்காழி) அவர்களால் உற்றார் உறவினர்கள் மற்றும் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது மனுதாரருக்கு 15 பவுன் தங்க நகையும், எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தங்க நகை, இருசக்கர மோட்டார் வாகனம் மற்றும் சீர்வரிசை பொருட்கள் மனுதாரரின் குடும்பத்தினரால் சீதனமாக கொடுக்கப்பட்டது. திருமணத்திற்கு பின்னர் மனுதாரரும், எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரர் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறு வாழ்ந்து வந்த சமயத்தில் மனுதாரர் கொண்டு வந்த நகை மற்றும் சீர்வரிசைபொருட்கள் காணாது எனக்கூறி எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தினரும் மனுதாரரை உடலளவிலும், மனதளவிலும் கொடுமைப்படுத்தியதோடு மட்டுமில்லாமல் மனுதாரரின் குடும்பத்தினரை சொல்லொண்ணா முறையில் மிகவும் தரக்குறைவாக பேசிவந்தனர். இந்த சூழ்நிலையில் எதிர்மனுதாரர், மனுதாரரிடம் Business பண்ணலாம் என நினைக்கிறேன் உன் நகைகளை கொடு என கேட்கவும், மனுதாரர் நகைகளை கொடுக்க மறுத்ததைக்கண்ட எதிர்மனுதாரரின் குடும்பத்தினர்கள் மனுதாரரை அடித்து வெளியே தள்ளி கதவை பூட்டிவிட்டதால் வேறு வழியின்றி மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார். மனுதாரர் மட்டும் தனியாக வந்ததை கண்ட மனுதாரரின் குடும்பத்தினர் மனுதாரரை கர்ப்பினி என்றும் பாராமல் கேவலம் பணத்திற்காக அடித்து வீட்டைவிட்டு வெளியே விரட்டி கதவைப்பூட்டி விட்டனரே என நினைத்து வேதனைப்பட்டு வேறு வழியின்றி மனுதாரரின் நலன்கருதி ரூ.50,000/- பணத்துடன் மனுதாரரை அழைத்துச்சென்று எதிர்மனுதாரரின் வீட்டில் மனுதாரரின் குடும்பத்தினர் விட்டுவிட்டுவந்தனர். எதிர்மனுதாரர் ரூ.1,00,000/- கேட்டதற்கு வெறும் ரூ.50,000/- தான் கொண்டு வந்திருக்கிறாய் எனக்கூறி எதிர்மனுதாரர் தினசரி மது அருந்திவிட்டு வந்து மனுதாரரை அடித்து உதைத்து சித்ரவதை படுத்துவதை வாடிக்கையாய் கொண்டிருந்தார். எதிர்மனுதாரரின் செய்கையால் மனுதாரர் சரியாக சாப்பிடாமலும், மேற்படி கொடுமைகளை தனது பெற்றோரிடம் கூறினால் அவர்கள் மேற்கொண்டு கவலைப்படநேரிடும் என நினைத்து எதையும் வெளியே சொல்லாமல் அமைதிகாத்து வந்துள்ளார்.

3. மேற்கண்ட நிலையில் மனுதாரருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு மனுதாரரை அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் 29.09.2010 அன்று தொண்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக

சேர்த்தனர். அங்கு அன்றைய தினமே மனுதாரருக்கு எபினேஷா என்ற பெண் குழந்தை பிறந்ததை கேள்விப்பட்ட மனுதாரரின் குடும்பத்தினர் தொண்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் வந்து மனுதாரரையும் குழந்தையையும் பார்த்து அங்கேயே தங்கியிருந்து 01.10.2010 ல் Discharge செய்து மனுதாரரின் வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டனர். மனுதாரருக்கு குழந்தை பிறந்து 3 மாதங்களாகியும் மனுதாரரையும் குழந்தையையும் பார்ப்பதற்கு எதிர்மனுதாரரோ, அவரது குடும்பத்தினரோ வராததால் மனுதாரரின் தகப்பனார் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று விசாரித்ததில் மேற்படி எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் மேற்படி மனுதாரரின் தகப்பனாரை சொல்லொண்ணா முறையில் மிகவும் கேவலமாக பேசி அசிங்கப்படுத்தி அனுப்பியதால் மனுதாரரின் தகப்பனார் 21.01.2011 ல் ஊர் முக்கியஸ்தர்களிடம் பஞ்சாயத்து வைத்துள்ளார். மேற்படி பஞ்சாயத்தில், எதிர்மனுதாரர், நாங்கள் திருமணம் செய்த காலத்திலிருந்து எட்டே மாதங்களில் ஒரு பெண்குழந்தை பிறந்துவிட்டது. ஆகையால் இந்த குழந்தை எனக்கு பிறக்கவில்லை எனவும், திருமணத்திற்கு முன்பே மனுதார் கர்ப்பமாக இருந்துள்ளார் என்று கூறியுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுமைகளையும் அவலங்களையும் தாங்கிக்கொள்ளமுடியாத மனுதாரரின் தகப்பனார், பஞ்சாயத்திற்கு மறுநாளே 22.01.2011 அன்று விஷம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். இந்த சூழ்நிலையில் மனுதார் மற்றும் மனுதாரரின் குழந்தையின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு மனுதாரரின் உறவினர்கள் கடந்த 03.07.2012 ல் எதிர்மனுதாரரின் கிராமமான தொண்டி நரிக்குடியில் பஞ்சாயத்து வைத்தனர்.

4. மேற்படி பஞ்சாயத்திற்கு கட்டுப்பட மறுத்த எதிர்மனுதார், இது தனது குடும்ப விசயம் எனவும், மேற்படி பிரச்சினையை தான் நீதிமன்றம் மூலம் தீர்த்துக்கொள்வதாக கூறி மேற்படி பஞ்சாயத்தார் கூறிய அறிவுரைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். இதனால் வேறுவழியின்றி மனுதாரர் தமது குழந்தையுடன் மனுதாரரின் பெற்றோர் வீட்டிலேயே தங்கி வசித்து வருகிறார். என்றாவது ஒருநாள் எதிர்மனுதார் மனுதாரரை புரிந்துகொண்டு மனுதாரரையும், குழந்தையையும் தேடிவருவார் என எதிர்பார்த்து நம்பிக்கையுடன் காத்திருந்த மனுதாரருக்கு இனியும் எதிர்மனுதார் வருவார் என்ற நம்பிக்கை இல்லை. மேற்படி எதிர்மனுதாரரின் செயல்களையும் நடவடிக்கைகளையும் பார்க்கும்பொழுது மனுதாரருடன், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்வதற்கு ஒரு வாய்ப்பும் இல்லை என்பது தெளிவாக

தெரிகிறது. ஆகவே தங்களுக்குள் ஏற்பட்ட திருமண உறவை ரத்து செய்ய கோரி மனுதாரராகிய மனுதாரர் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**5.** <u>எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம் :</u>

மனுதாரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதில்லை. மனுதாரின் மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையில்லை, அவைகள் அனைத்தும் எதிர்மனுதாரரால் திட்டவட்டமாக மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது. மேலும் மனுதார் தனக்கு எதிர்மனுதார் குடும்பத்தினரால் செய்யப்பட்ட கொடுமைகளையெல்லாம் அவருடைய பெற்றோரிடம் கூறினால் மேலும் மனம் வருந்துவர் என்று அவர்களிடம் கூறாமல் இருந்ததாக கூறுவது உண்மைக்கு மாறானது. மேலும் மனுதாரரை, எதிர்மனுதாரர் கொடுமைப்படுத்துவதை வழக்கமாக கொண்டிருந்ததாகவும், மனுதாரரின் தந்தை விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டதாகவும், சொல்வது முற்றிலும் தவறானதாகும். திருமணமான காலம் முதலே மனுதார், எதிர்மனுதாரருடன் சுமூகமாக குடும்பம் நடத்தாமல் எவ்வித நியாயமான காரணங்கள் இன்றி சிறு சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு தனது பெற்றோர் வீட்டிற்குச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்ததாகவும், எதிர்மனுதார், மனுதார் குடும்ப வாழ்க்கையின் மேன்மை உணர்ந்து திருந்தி தன்னுடன் நல்லமுறையில் வாழ்வார் என்ற நம்பிக்கையில் காத்திருந்ததாகவும், ஆனால் அதற்கு மனுதார் ஒருபோதும் தயாராக இல்லை என்பதாகவும், மேலும் எதிர்மனுதார் தன்னுடைய உறவினர்கள் மூலமும் முக்கிய நபர்கள் மூலமும் , மனுதாரரையும், குழந்தையையும் அழைத்து வருவதற்கு எவ்வளவோ முயன்றும் பலனளிக்கவில்லை . மேலும், இந்த எதிர்மனுதாரரை ஏதாவது குற்றம் சாட்டி நிரந்தரமாக பிரிந்து வாழவே விரும்புகிறார்.ஆகவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரியுள்ளார்.

6. மேற்படி மனுவில் மனுதார் தரப்பில், மனுதார் 1 சாட்சி விசாரிக்கப்பட்டு 4 சான்றாவணங்களும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதார் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. மேற்படி மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**8.** பிரச்சனை

மேற்படி மனுவின்படியும், மனைவியான மனுதாரரின் பிரமாண வாக்குமூலத்தின்படியும் பார்க்கும்போது, மனைவியான மனுதாரருக்கும், கணவரான எதிர்மனுதாரருக்கும் 03.02.2010ல் உற்றார் உறவினர்கள் முன்னிலையில் ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2ன் படி தொண்டி நரிக்குடியில் உள்ள எதிர்மனுதார் வீட்டில் வைத்து கிறிஸ்தவ மத சடங்குகளின்படி திருமணம் நடந்துள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. மனைவியாகிய மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது அவரது சாட்சியத்தில் தானும், எதிர்மனுதாரரும் இராமநாதபுரம் மாவட்டம் தொண்டி நரிக்குடியில் உள்ள எதிர்மனுதார் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், தான் கொண்டு வந்த நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் கானாது எனக்கூறி எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் தன்னை மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் தனது குடும்பத்தினரை சொல்லொண்ணா முறையில் மிகவும் தரக்குறைவாக பேசிவந்ததாகவும், இந்த சூழ்நிலையில் எதிர்மனுதாரர் தன்னிடம் Business செய்வதற்காக தன் நகைகளை கேட்டதாகவும் ஆனால், தான் நகைகளை கொடுக்க மறுத்து வந்ததால், எதிர்மனுதாரரின் குடும்பத்தார்கள் தன்னை அடித்து வெளியே தள்ளி கதவை பூட்டி தனது பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவிட்டதாகவும், தான் மட்டும் தனியாக வந்ததை கண்ட தனது குடும்பத்தினர் தன்னை கர்ப்பினி என்றும் பாராமல் கேவலம் பணத்திற்காக அடித்து வீட்டைவிட்டு வெளியே விரட்டி கதவைப்பூட்டி விட்டனரே என நினைத்து வேதனைப்பட்டு, தனது நலன் கருதி ரூ.50,000/- பணத்துடன் தன்னை அழைத்துச்சென்று எதிர்மனுதாரரின் வீட்டில் தனது குடும்பத்தினர் விட்டுவிட்டு வந்ததாகவும், எதிர்மனுதாரரின் குடுமபத்தார்கள் ரூ.1,00,000/- கேட்டதற்க வெறும் ரூ.50,000/- தான் கொண்டு வந்திருக்கிறாய் என கூறி எதிர்மனுதார் தினசரி மது அருந்திவிட்டு வந்து தன்னை அடித்து உதைத்து சித்ரவதைபடுத்தி வந்ததாகவும்,29.09.2010 அன்று தொண்டியில் உள்ள அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்காக

சேர்த்து அன்றைய தினமே ம.சா.ஆ.4ன் படி தனக்கு பெண்குழந்தை பிறந்ததாகவும், தன்னையும், தன் குழந்தையையும் தனது பெற்றோர் அழைத்து வந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

9. மேலும் தனக்கு குழந்தை பிறந்து 3 மாதங்களாகியும் தன்னையும், குழந்தையையும் பார்ப்பதற்கு எதிர்மனுதாரரோ, அவரது குடும்பத்தினரோ வராததால் தனது தகப்பனார் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று விசாரித்ததில் மேற்படி எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தினரும் மிகவும் கேவலமாக அசிங்கப்படுததி அனுப்பியதால் தனது தகப்பனார் வேறு வழியின்றி கடந்த 21.10.2011ல் ஊர் முக்கியஸ்தர்களிடம் பஞ்சாயத்து வைத்ததாகவும், மேற்படி பஞ்சாயத்தில் எதிர்மனுதார் " தாங்கள் திருமணம் செய்த காலத்திலிருந்தே எட்டே மாதங்களில் ஒரு பெண் குழந்தை பிறந்துவிட்டதாகவும், ஆகையால் இந்த குழந்தை தனக்கு பிறக்கவில்லை என்றும், திருமணத்திற்கு முன்பே மனுதார் கர்ப்பமாக இருந்துள்ளதாகவும் கூறியுள்ளார். மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுமைகளையும், அவலங்களையும் தாங்கிக்கொள்ளமுடியாத தனது தகப்பனார் பஞ்சாயத்திற்கு மறுநாளே விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார். கடந்த 7 வருடத்திற்கு மேலாக எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து, தான் வாழ்ந்து வருவதாலும், இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றும் எனவே, தங்களுக்குள் ஏற்பட்ட திருமண உறவை ரத்து செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

10. மேற்படி மனுதாரரின் செய்திக் கூற்றினை மறுத்து, கணவரான எதிர்மனுதாரர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது, மனுதார் தன்னுடன் சுமூகமான முறையில் குடுமபம் நடத்தாமல் எவ்வித நியாயமான காரணங்களும் இன்றி தன்னிடம் அடிக்கடி பிரச்சினை செய்து அவருடைய பெற்றோர் விட்டிற்கு சென்றுவிட்டதாகவும், மேலும் மனுதார் தன்னிடம் ஏதும் சொல்லிக்கொள்ளாமல் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக அவரது பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாகவும், தானும் பலமுறை சேர்ந்து வாழ்வதற்கு எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்துவிட்டதாகவும், அவர் தன்னுடன் வாழத்தயராக இல்லை என்பதாகவும், தன்னை அவருக்கு பிடிக்கவில்லை என்றும் கூறி தனியே பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், தானும் தன்னுடன் எப்படியாவது மனந்திருந்தி வாழ்வார் என்ற நம்பிக்கையில்

காத்திருந்ததாகவும், ஆனால் மனுதார் தன்னை பிடிக்கவில்லை என்றும், தனது குடும்பத்தினரின் நிர்ப்பந்தத்தின்பேரில் தன்னை திருமணம் செய்துகொண்டதாக கூறிவிட்டதாகவும், பொய்யான காரணங்களை கூறி நடக்காத ஒன்றை நடந்ததாக கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும். மேற்படி மனுதாரரின் செய்கையால், தான், மனதளவில் பாதிப்படைந்துள்ளதாகவும், இனிமேலும் மனுதாரருடன் சேர்ந்து வாழ தனக்கு விருப்பம் இல்லை என்பதாகவும் மேலும், இந்த எதிர்மனுதாரரை ஏதாவது குற்றம் சாட்டி நிரந்தரமாக பிரிந்து வாழவே விரும்புகிறார் என்றும் கூறியுள்ளார்.

11. மேற்படி இருதரப்பு செய்திகளிலிருந்து பார்க்கும்போது, மனுதாரரும், எதிர்மனுதாரரும் குழந்தை பிறப்பதற்கு முன்பிலிருந்தே பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் இருவரின் சாட்சியங்களிலிருந்து தெரியவருகிறது. இருப்பினும், கணவராகிய எதிர்மனுதாரரின் குடும்பத்தினர்கள் மனுதாரர் கொண்டு வந்த நகை மற்றும் சீர்வரிசை பொருட்கள் கானாது எனக்கூறி மனுதாரரை மிகவும் கேவலமாகத் திட்டி மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்தி வந்ததோடு மட்டுமல்லாமல் மனுதாரரின் குடுமபத்தினரை சொல்லொண்ணா முறையில் மிகவும் பேசிவந்துள்ளதாகவும், அதனால் இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதனால்தான் பிரிந்து வாழ்ந்து வருவதாக மனுதாரர் தனது முதல்விசாரணையில் கூறியுள்ளார். ஆனால் மேற்படி மனுதாரரின் தரப்பு செய்தியை மறுத்து எதிர்மனுதாரர் எ.ம.சா.1 தனது சாட்சியத்தில், மனுதாரர் இவ்வழக்கிற்காக தன் மீது பொய்யான காரணங்களை கூறி நடக்காத ஒன்றை நடந்ததாக கூறி தன்னை மனதளவில் பாதிப்படையச் செய்வதாகவும், தெரிவித்துள்ளார்.

12. மேற்படி அனைத்து செய்திகளையும் பரிசீலிக்கும்போது, மேற்கண்ட நிலையில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன் மனைவி என்பது ஒத்துக்கொண்டு இருதரப்பினரும் அவர்களுக்குள்ள குற்றச்சாட்டுக்களை கூறி வந்துள்ள நிலையில், இருவரும் சேர்ந்து வாழ்ந்தால் இருவருக்கும் நன்மையாக இருக்காது என்று கருதி அவர்களுக்குள் எந்தவிதமான நட்புறவினையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை மாறாக இருவரும் ஒருவரை ஒருவர் மாறிமாறி திட்டிக்கொண்டேயும் கருத்து வேற்றுமையுடனும் வாழ்ந்து வந்துள்ளதால் அவர்களிடையே கசப்புணர்வே மேலோங்கி

உள்ளதாக தெரியவருவதோடு, இனிமேலும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதாக அவர்கள் இருவரும் இந்நீதிமன்றத்திலே தெரிவித்துள்ளார். இந்நிலையில் சட்டப்படியாக விவாகரத்து செய்துகொண்டு இருவரும் பிரிந்து வாழ்வதே சரியானது என்று இந்நீதிமன்றம் முடிவெடுத்துள்ளது.

13. மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 03.02.2010ல் சமூக வழக்கம் மற்றும் கிறிஸ்தவ மத சடங்குகளின்படி தொண்டி நரிக்குடியில் உள்ள எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து நடந்த திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணியில் பதியப்பட்டதை என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2018ம் ஆண்டு ஜீன் திங்கள் 21ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

1. காந்திமதி

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

01 - - திருமண பத்திரிக்கை

02. - - திருமண பதிவு சான்றிதழ்

03. - - குடும்ப அட்டை நகல்

04. - - எபினேஷாவின் பிறப்புச்சான்றிதழ்

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

01. ஆரோக்கியசாமி

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> .. இல்லை ..

மு.மா.நீ.